**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு.R.சரவணபாபு, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**
**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் புதன்கிழமை**
**இந்து திருமணம் அசல் மனு எண்.81/2026**
CNR.No.TNSA16-000328-2026

1. A. அறிவழகன்
2. R. ரஞ்சிதா ... மனுதாரர்கள்

//எதிராக//

இல்லை ... எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 06.08.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர்கள் G.சுமதி மற்றும் S.A.தமயந்தி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இம்மனு இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 13–Bன் கீழ் கடந்த 08.09.2024 ம் தேதி சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி, மல்லிகுந்தம் அருள்மிகு முருகன் திருக்கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் இருவருக்கும் கடந்த 08.09.2024 ம் தேதி சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி, மல்லிகுந்தம் அருள்மிகு முருகன் திருக்கோவிலில் இருவீட்டார் சம்மதத்தின் பேரில் குல வழக்கப்படி திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்திற்கு பின்பு இருவரும் 1 ம் மனுதாரரின் வீட்டில்

இல்வாழ்க்கையை துவங்கியதாகவும், கடந்த 15.10.2024 ம் தேதி வரை மட்டுமே இருவரும் திருமண உறவில் இருந்ததாகவும், அந்த சமயத்தில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், பின்னிட்டு இருவீட்டு பெரியோர்களும் சமரசம் பேசி மனுதாரர்கள் இருவரையும் சேர்த்து வைக்க முயற்சி எடுத்த போதும் அந்த முயற்சி தோல்வியல் முடிந்ததாகவும், 2 ம் மனுதாரர் கடந்த காலம், எதிர்கால பொருளுதவி எதுவும் 1 ம் மனுதாரரிடம் கோரப்போவதில்லை என்றும், 2 ம் மனுதாரரின் பொருட்கள், நகைகள் 6 பவுன் ஆகியவற்றை 2 ம் மனுதாரர் திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், திருமணத்தின் போது 1 ம் மனுதாரருக்கு அணிவித்த 2 ம் பவுன் நகையை 2 ம் மனுதாரர் திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி மனுதாரர்கள் வேறு எந்த நீதிமன்றத்திலும் இதுபோன்ற மனுவைத் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே மனுதாரர்கள் இருவரும் "மனம் ஒத்த விவாகரத்து" மனுவினை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3.**<u>இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:</u>**

(i) மனுவில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

(ii) வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது?

4. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் 1 ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2 ம் மனுதாரர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.4 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு மனு ஆவணங்கள் மற்றும் சாட்சி, சான்றாவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

**<u>6. பிரச்சனைக்குரிய தீர்வு:</u>**

(i) மனுவில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

மனுதாரர்கள் தரப்பு கற்றார்ந்த வழக்கறிஞர்கள் வாதிடுகையில், மனுதாரர்கள் இந்து திருமண முறைப்படி திருமணம் செய்து கொண்டார்கள் என்ற சங்கதி ம.சா.1 சாட்சியத்தின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் சேர்ந்து வாழும் சூழ்நிலை இல்லை என்ற காரணத்தால், மனுதாரர்கள் கோரியபடி விவாகரத்து வழங்க வேண்டும் என வாதிட்டார்.

7. எனவே மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், 2ம் மனுதாரர் ம.சா.2 ஆகவும், விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ம.சா.1 தனது சாட்சியத்தில் தனக்கும் 2ம் மனுதாரருக்கும் கடந்த 08.09.2024ம் தேதி சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி, மல்லிகுந்தம் அருள்மிகு முருகன் திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றது என்று சாட்சியமளித்துள்ளார். மனுதாரர்களின் திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், திருமண புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.3 ஆகவும், 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் 1ம் மனுதாரருக்கும் 2ம் மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை உறுதிப்படுத்துகிறது. மேலும் ம.சா.1 தனது சாட்சியத்தில் திருமணத்திற்கு பிறகு சிறிது நாட்களில் தங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து விட்டதாகவும் குடும்ப பெரியவர்கள் மூலம் பலமுறை சேர்ந்து வாழ சமாதானம் பேசியும் சேர்ந்து வாழ தங்களுக்குள் உடன்பாடு ஏற்படவில்லை என்றும் திருமணத்தின் பயனாக குழந்தைகள் ஏதுமில்லை என்றும், இருவரும் கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வருவதால் இருவரும் சமரச அடிப்படையில் மணமுறிவு பெற்று கொள்ள விரும்பி மனுவை

தாக்கல் செய்திருப்பதாகவும் சாட்சியமளித்துள்ளார். ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள 2ம் மனுதாரரும் ம.சா.1 சாட்சியத்தை உறுதிப்படுத்தி சாட்சியமளித்துள்ளார். எனவே, இனி தரப்பினர்கள் இருவரும் சேர்ந்து வாழும் சூழ்நிலை இல்லை என்பதை கருத்தில் கொண்டும், தரப்பினர்களின் எதிர் கால வாழ்க்கையினை கருத்தில் கொண்டும், மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>8. பிரச்சனைக்குரிய தீர்வு:</u>

(ii) வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது?

இம்மனுவில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இம்மனுவிற்கு தீர்வு காணப்படுகிறது.

9. எனவே, மேற்படி விவாதங்களின் அடிப்படையில் 1, 2ம் மனுதாரர்களுக்கு இடையே கடந்த 08.09.2024ம் தேதி சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி, மல்லிகுந்தம் அருள்மிகு முருகன் திருக்கோவிலில் திருமணம் நடந்தது குறித்து 1, 2ம் மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்ட நிலையில் அவர்கள் மீண்டும் சேர்ந்து வாழ வாய்ப்பில்லாத நிலையிலும், மேற்படி திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு ஏற்றதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, இந்நீதிமன்றம், மனுதாரர்களுக்கு இடையே கடந்த 08.09.2024ம் தேதி சேலம் மாவட்டம்,

மேட்டூர் வட்டம், மேச்சேரி, மல்லிகுந்தம் அருள்மிகு முருகன் திருக்கோவிலில் நடைபெற்ற திருமணத்தை இந்து திருமண சட்டம், 1955 பிரிவு 13B ன் கீழ் ரத்து செய்து மனுதாரர்களுக்கு ஒத்திசைவு விவாகரத்து வழங்கி உத்தரவிடுகிறது. செலவு தொகையை தரப்பினர்களே ஏற்று கொள்ளவும் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர், என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.SARAVANA BABU Digitally signed by R.SARAVANA BABU

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**

**1ம் மனுதாரர் தரப்பு சாட்சி:**

ம.சா.1 – திரு. அறிவழகன்

**1ம் மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 08.09.2024 | திருமண அழைப்பிதழ் | அசல் |
| ம.சா.ஆ.2 | – | திருமண புகைப்படம் | அசல் |
| ம.சா.ஆ.3 | – | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை | நகல் |

**2ம் மனுதாரர் தரப்பு சாட்சி :**

ம.சா.2 – திருமதி. ரஞ்சிதா

**2ம் மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.4 | – | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை | நகல் |

R.SARAVANA BABU Digitally signed by R.SARAVANA BABU

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**